# குளித்தலை நகராட்சி

25.09.2019.ஆம் தேதி புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ)
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் (குளித்தலை நகராட்சி பொறியாளராக பணிபுரிந்து, சிவகங்கை நகராட்சிக்கு பொறியாளராக பணிமாறுதலில் சென்ற திரு.மு.கார்த்திகேயன்) 01.08.2019 முதல் 18.09.2019.ஆம் தேதி வரையிலான தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பி) திரு.ந.புகழேந்தி அவர்களின் 19.08.2019 முதல் 31.08.2019.ஆம் தேதி வரையிலான தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகர எல்லைக்குள் வைகைநல்லூர் வடக்கு கிராமம் சர்வே எண்.136/3.ல், 0.48.5 ஹெக்டேர் மற்றும் சர்வே எண்.136/4A.ல் பரப்பு 0.41.0 ஹெக்டேர், ஆக மொத்தம் 0.99.50 ஹெக்டேர் பரப்பளவு இடத்தினை, மனைகளாக பிரிக்க அனுமதிகோரி திரு.வே.பல்லவிராஜா, த/பெ.வேலாயுதம் என்பவர் நகராட்சிக்கு 12.03.2019.ஆம் தேதியில் அளித்த விண்ணப்பத்தினை தொடர்ந்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் பரிசீலனைக்கு இவ்வலுவலக ந.க.538/2019/பி2 எண்ணிட்ட 18.03.2019.ல் தேதிய கடிதத்தின்மூலம் அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.725/2019/திம2, நாள்–18.05.2019.ல், சாலை அமைப்பு வரைபடம் தயார் செய்து, வரைபடத்தின்படி, சாலைகள், வடிகால், பாலங்கள் முறையாக அமைத்து நகராட்சிவசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக, மனை உரிமையாளர் தார்சாலை அமைத்துள்ளதை, நகராட்சி பொறியாளர் அவர்கள் மனைப்பிரிவில் நேரில் ஆய்வுசெய்து, சாலையை நகராட்சிவசம் எடுத்துக்கொள்ளவும், தானசெட்டில்மெண்டில் நகராட்சிக்கு வழங்கவும், 26.08.2019.ஆம் தேதியில் ஒப்புதல் தெரிவித்துள்ளார். எனவே, இம்மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்கா இடங்களை நகராட்சிவசம் எடுத்துக்கொள்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி, முறையாக தார்சாலை, வடிகால், சிறுபாலங்கள் ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளதால், மேற்படி சாலைகள் மற்றும் பூங்கா இடத்தை பத்திரம் வாயிலாக பதிவுசெய்து நகராட்சிவசம் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.538/2019/பி2)

பொருள்– 04. இந்நகராட்சி அனைத்து பணியாளர்களுக்கும், 2008–2009.ஆம் ஆண்டுமுதல் 2016–2017.ஆம் ஆண்டுவரை, சேமநல நிதி இருப்பு தொகை மீது வட்டி கணக்கீடு செய்து வழங்குவதற்கு, உரிய கணக்கீடு விபரங்கள் தயார்செய்து, கருத்துரு அனுப்புவதற்கு தேவையான படிவங்கள் தயார்செய்து வழங்கும் நடவடிக்கைக்கு, தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, கடந்த 04.06.2019 அன்று விலைப்புள்ளி கோரியவகையில், கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1) | K.V.நிரஞ்சன், H.326/8-கூட்டப்பள்ளி காலனி, திருச்செங்கோடு. | 1,20,000/– |
| 2) | அழகர்சாமி, 61,தெற்குகாலனி, குமாரபாளையம் | 1,70,000/– |
| 3) | V.சதீஸ்குமார், ராம் செலுயூசன்ஸ், 55/15,கிழக்குதெரு, காமராஜ்நகர், திருவான்மியூர், சென்னை. | 1,88,000/– |

மேற்கண்ட மூன்று நிறுவன விலைப்புள்ளிகள் வரப்பெற்றதில், இனம் (1).ல் கண்ட திரு.K.V.நிரஞ்சன் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணிமேற்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதி வழங்கலாம்.
2). மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.K.V.நிரஞ்சன் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3). செலவினம் ரூ.1,20,000/–ஐ, பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1658/2016/பி1)

*******

# <u>குளித்தலை நகராட்சி</u>

25.09.2019.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 166 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 167 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 168 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 4 | 4 | 169 | அனுமதி அளிக்கப்பட்டது. |

ஒம்/– ந.புகழேந்தி,
நகராட்சி பொறியாளர்,
ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.